


ஆயுதங்களைக் காட்டிலும், ஆதரவு தேசங்களைக் காட்டிலும் ஒரு தீவிரவாத இயக்கத்தின் மிகப்பெரிய பலம் என்ன தெரியுமா? சக இயக்கங்களுடன் நட்புறவு. ஓர் அரசாங்கமென்றால் நெட் ஒர்க்கில் பிரச்னை இருக்காது. கோககோலா மாதிரி ஒரு பெரிய கம்பெனி என்றாலும், கிரவுண்டு கிடைக்கிற இடங்களிலெல்லாம் கடை விரித்துவிடலாம். ஒரு தீவிரவாத இயக்கம் எப்படித் தன் எல்லைகளை விரிவு செய்துகொள்ள இயலும்?

வேறு வேறு தேசங்களில் உள்ள இயக்கங்களுடன் நட்புகொள்வதன் மூலம் மட்டும்தான் அது சாத்தியம். கொள்கை, கோட்பாடு, லட்சியம் மண்ணாங்கட்டிகள் என்று இவர்களுக்குள் ஏகப்பட்ட Fire Walls இருக்கும். அனைத்தையும் மீறி வெளி தேசத்து இயக்கங்களுடன் நட்பு கொள்வது, கொஞ்சம் கொஞ்சமாக நட்பு, எல்லைகளை விரிவாக்கிக்கொள்வது, அதன்மூலம் பல்வேறு தேசங்களில் கிளை பரப்புவது, காரியம் செய்வது, வீரியம் காட்டுவது எல்லாம் கொஞ்சம் கஷ்டமான காரியம்.

ஆனால், அதிர்ஷ்டவசமாக ஹிஸ்புல்லாவுக்கு ஆரம்பம் முதலே இந்த நெட் ஒர்க்கிங் ஜோராக அமைந்துவிட்டது. ஹிஸ்புல்லாவின் தோழமை இயக்கங்கள் யாவை என்று கேட்பதைக் காட்டிலும், ஹிஸ்புல்லா யாருடன் நட்பு கொள்ளவில்லை என்று கேட்டால், பதில் தேடுவது எளிதாக இருக்கும். அந்தளவுக்கு அத்தனை பேருடனும் முஸ்தபா, முஸ்தபா பாடும் இயக்கம் அது.

சுருக்கமாகச் சொல்வதென்றால், உலகில் இன்றுவரை மிகத் தீவிரமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கும் அத்தனை தீவிரவாத முஸ்லிம் அமைப்புகளுடனும் ஹிஸ்புல்லாவுக்குத் தொடர்புகளும் நெருக்கமும் உண்டு. ஹிஸ்புல்லா தலைமை இன்றுவரை திரும்பிக்கூடப் பார்த்திராத தேசங்களில் கூட (உதாரணம் இந்தியா), ஒரு சில இயக்கங்கள் ஹிஸ்புல்லாவிடம் போர்ப் பயிற்சி பெற்றிருக்கின்றன.

ஆப்கனிஸ்தானில் ரஷ்யப்படைகள் ஊடுருவிய எண்பதுகளின் தொடக்க வருடங்களில், உலகம் முழுவதிலுமிருந்து ஏராளமான முஸ்லிம்கள், ஆப்கன் யுத்தத்தில் பங்குபெறுவதை ஒரு புனிதப் பணியாகக் கருதி அங்கே சென்றார்கள். அதற்கு முன் ஆயுதம் எதையும் கண்ணால் கூடப் பார்த்திராத சாதாரண மக்கள்.

அவர்களுக்கெல்லாம் ஆப்கன் – பாகிஸ்தான் எல்லையோர வனப் பகுதிகளில், ஒசாமா பின்லேடனும் வேறு சில ஆப்கன் போராளிக் குழுத் தலைவர்களும் போர்ப்பயிற்சி அளித்துக்கொண்டிருந்தார்கள். (அப்போது அல் காயிதா என்கிற இயக்கமே உருவாகியிருக்கவில்லை.)

கட்டுக்கடங்காத அளவுக்கு ஆள்கள் வரத்தொடங்கியபோது, அத்தனை பேருக்கும் போர்ப்பயிற்சி அளிக்கத் திணறிய ஆப்கன் போராளித் தலைவர்கள், கொத்துக்கொத்தாக அவர்களில் பலரை லெபனானுக்கு அனுப்பினார்கள். லெபனானில் இருந்தும் பலபேர் ஆப்கனுக்கு வந்து தம்மாலான பயிற்சிகளை வழங்கியதோடு மட்டுமல்லாமல், போர்முனையிலும் உடன் இருந்து வழிகாட்டியிருக்கிறார்கள்.

ஒருவகையில் இன்றைய தீவிரவாத முஸ்லிம் அமைப்புகளில் பெரும்பாலானவை உற்பத்தியான இடம், தருணம் அனைத்துமே ஆப்கனிஸ்தான் யுத்தம்தான். யுத்தம் நடந்த காலகட்டத்தில் (1979ம் வருடம் தொடங்கி எண்பதுகளின் இறுதிவரை சுமார் பத்தாண்டுகள் இந்தப் போர் நீடித்தது. இறுதியில் ரஷ்யப்படைகளை ஆப்கன் போராளிகள் வென்று, விரட்டினார்கள்.) அவர்கள் அத்தனை பேரும் தனி நபர்கள். அல்லது குறிப்பிட்ட தேச அடையாளத்தினை மட்டும் கொண்டவர்கள்.

யுத்தத்துக்குப் பிறகு, அதில் அடைந்த பிரமிக்கத்தக்க வெற்றிக்குப் பிறகுதான் ஓர் அமைப்பாகச் செயல்படலாம் என்கிற ஆசையே அவர்களுக்கு வந்தது. அல் காயிதா என்கிற அமைப்பை நிறுவும் எண்ணம் ஒசாமா பின்லேடனுக்கு ஏற்பட்டதற்கான காரணமே, ஆப்கன் யுத்தத்தில் அடைந்த வெற்றிதான். அதற்கு முன்வரை 'ஆப்கன் சர்வீஸ் ப்யூரோ' என்கிற பெயரில்தான் ஒசாமா அண்ட் கோ இயங்கிக்கொண்டிருந்தது.

தனியொரு தீவிரவாத இயக்கமாக அந்தக் காலகட்டத்தில் இவர்களில் யாருமே அடையாளம் காணப்படாத காரணத்தால், தேச எல்லைகள் கடந்து அத்தனை பேரிடமும் ஒரு சகோதரப் பிணைப்பு இருந்தது. ஏனெனில், அனைவருமே தமக்கு சம்பந்தமில்லாத ஆப்கனிஸ்தானுக்குச் சுதந்தரம் பெற்றுத் தர வேண்டும் என்கிற எண்ணத்தில் வந்தவர்கள்தான்.

பின்னாளில் அல் காயிதாவை உருவாக்கிய ஒசாமா, பின்னாளில் ஜமா இஸ்லாமியாவை உருவாக்கிய ஹம்பாலி, பின்னாளில் ஹிஸ்புல்லாவின் தலைவரான நஸருல்லா உள்ளிட்ட அத்தனை பேரும் அந்நாளில் ஆரம்பப் போராளிகள்தான். ஆகவே, தொடர்பும் நெருக்கமும் அன்றே ஏற்பட்டுவிட்டது.

இதனால்தான், எப்படி அல் காயிதா ஒரு கண்ணசைத்தால் உலகின் அத்தனை மூலைகளிலும் உதவுவதற்கு ஆள் கிடைக்கிறதோ, அதே மாதிரி ஹிஸ்புல்லா ஒரு வார்த்தை சொன்னாலும் உடனடியாகச் செய்துமுடிக்க, சர்வதேச முஸ்லிம் சமூகத்தில் அவர்களுக்கு அத்தனை போராளி இயக்கங்களிடையேயும் செல்வாக்கு உண்டு.

முஸ்லிம் இயக்கங்கள் தவிர, ஒரு சில மதச்சார்பற்ற இடதுசாரி இயக்கங்களுடனும் ஹிஸ்புல்லாவுக்கு நெருக்கம் உண்டு. உதாரணமாக, ஆர்மீனியன் சீக்ரட் ஆர்மி (ASALA), வியட்நாம் தேசிய விடுதலை முன்னணி (NFLV), ரெட் ப்ரிகேட் (இத்தாலி), கொலம்பியப் புரட்சிகர ஆயுதப்படை (FARC), Shining Path (பெரு) ஆகியவை.

ஹிஸ்புல்லா இதுவரை போதைக் கடத்தலில் ஈடுபட்டதில்லை என்றபோதும், சில தென்னமெரிக்க போதைக் கடத்தல் நெட் ஒர்க்கின் தொடர்பு அவர்களுக்கு இருப்பதாக இஸ்ரேல் உளவுத்துறை மொசாட் ஒரு சில சந்தர்ப்பங்களில் சொல்லியிருக்கிறது. ஹிஸ்புல்லாவின் ஆயுதக் கடத்தல்களுக்கு இந்த நெட் ஒர்க் சில சந்தர்ப்பங்களில் பயன்பட்டிருக்கலாம் என்று யூகிக்கலாம். ஆனால், இது உறுதிசெய்யப்படாத தகவல் என்பதையும் சொல்லிவிட வேண்டும்.

இத்தனை தூரம் சொல்லிவிட்டு, பக்கத்து வீட்டு சகோதரர்களைப் பற்றிச் சொல்லாமல் இருக்கமுடியுமா?

சந்தேகமே இல்லை. ஹிஸ்புல்லா பாலஸ்தீன் இயக்கங்களின் உறவுக்கு க்ளோசப்பின் நேசப்பிணைப்பைத் தவிர, வேறு உதாரணமே சொல்லமுடியாது.

அந்தப் பக்கம் துருக்கி தொடங்கி இந்தப் பக்கம் ஆப்கனிஸ்தான் வரை; மேலே ஈரான் முதல் கீழே ஏமன் துறைமுகம் வரை. நடுவில் ஒரு கோடு போடும் செங்கடல் ஒரு பிரச்னை இல்லை என்றால் எகிப்தையும் சேர்த்துக்கொள்ளலாம். மத்தியக் கிழக்கு என்று பொதுவில் சொல்லப்படும் இந்தப் பெரிய நிலப்பரப்பின் எந்த ஒரு சந்தில் போய் நின்று 'பாலஸ்தீன்' என்று குரல் கொடுத்தாலும் கொடி பிடிக்கவோ, தடி பிடிக்கவோ நாலு பேர் கண்டிப்பாக இருப்பார்கள்.

மத்தியக் கிழக்கின் நிரந்தர சோகம் அது. என்றைக்கு இஸ்ரேல் என்றொரு புதிய பெயரை பாலஸ்தீன் மண்ணின் ஒரு பகுதிக்குச் சூட்டி, யூதர்கள் அங்கே குடிவந்தார்களோ (1948), அன்றிலிருந்து இன்றுவரை காயாமல் ஓடிக்கொண்டிருக்கும் கண்ணீர் நதி அது. யூதர்கள் வந்தேறிகள், அவர்களை ஒழித்துவிட்டுத்தான் மறுகாரியம் என்று பாலஸ்தீன் அரேபியர்கள் கச்சை கட்டிக்கொண்டிருக்கிறார்கள். ஒட்டுமொத்த அரபு உலகமும் தன் இருப்புக்குப் பிரச்னை என்று கருதும் இஸ்ரேல், சாத்தியமுள்ள அத்தனை விதங்களிலும் மத்தியக் கிழக்கைக் கூறுபோடப் பார்க்கிறது.

பாலஸ்தீன் அரேபியர்களின் நியாயத்தை மேற்கு உலகம் பொதுவாகக் கண்டுகொள்வதில்லை. குறிப்பாக அமெரிக்கா. அவர்களுக்கு மத்தியக் கிழக்கின் எண்ணெய் வளம் முக்கியம். அதன்மூலம் கொழிக்கும் பணம் முக்கியம். இஸ்ரேல் ஒரு துருப்புச் சீட்டு. அமெரிக்காவின் மத்தியக் கிழக்குச் சின்ன வீடு மாதிரியான பிரதேசம் அது. இஸ்ரேலை வைத்துத்தான் அமெரிக்கா அங்கே கபடி ஆடுகிறது. அத்தனை அரபு தேசங்களையும் நிரந்தர அச்சத்தில் வைத்திருக்கிறது. குவைத்தில் யுத்தம், சவூதி அரேபியாவில் படைத்தளம், ஈராக்கில் ரகளை, ஆப்கனில் அடிதடி, ஈரான் மேல் அடுத்த கண் என்று ஒட்டுமொத்த மத்தியக் கிழக்கையும் கபளீகரம் செய்யும் அமெரிக்காவின் ஆசைக்கு இஸ்ரேல் ஒன்றுதான் அந்தப் பிரதேசத்தில் ஆதரவு தெரிவிக்கும் தேசம்.

ஏற்கெனவே சவூதி அரேபியா, குவைத், ஈராக், ஆப்கனிஸ்தான் என்று வரிசையாக மத்தியக் கிழக்கு தேசங்கள் அமெரிக்காவின் பிடியில் அகப்பட்டுவிட, பாலஸ்தீனியர்களின் குரல், தாயற்ற அபலைக் குழந்தையின் கதறல்போல் காற்றில் கரைந்துபோகத் தொடங்கிவிட்டது.

சக தேசங்கள் உதவாத சூழ்நிலையில், சக போராளி இயக்கங்கள்தான் பாலஸ்தீனிய இயக்கங்களுக்கு உதவியாக வேண்டிய நிலைமை. அரசாங்கங்கள் எதிர்கொள்ள வேண்டிய ராஜாங்க ரீதியிலான பிரச்னைகள், பேச்சுவார்த்தை சடங்குகள், செயற்கையான அமைதி பாவனை, நல்லுறவு சுற்றுப்பயணங்கள் இன்னபிற அபத்தங்கள் எதுவும் இத்தகைய போராளி இயக்கங்களுக்கு நிர்ப்பந்தம் இல்லை. கண்ணுக்குக் கண்; பல்லுக்குப் பல். உயிருக்கு உயிர். உடைமைக்கு உடைமை.

ஓரடி கொடுத்தால் ஒன்பதாகத் திருப்பிக் கொடுக்கும் துணிவும் திராணியும் இந்த இயக்கங்களிடையே இருப்பதுதான், இஸ்ரேலுக்கு இன்றைய தேதியில் இருக்கும் ஒரே முட்டுக்கட்டை. அரசாங்கங்களால் கைவிடப்பட்ட பாலஸ்தீனிய மக்களுக்கும் இந்த இயக்கங்கள்தான் ஆறுதலும் ஓரளவு நம்பிக்கையும் தருகின்றன.

பாலஸ்தீன் விடுதலை இயக்கங்கள் என்பவை ஒன்றிரண்டு அல்ல. இருபத்தைந்துக்கும் மேற்பட்ட போராளி இயக்கங்கள் பாலஸ்தீனுக்குள் உண்டு. அவற்றில் பெரும்பாலான இயக்கங்கள் யாசிர் அராஃபத் இருந்தவரை அவரது தலைமையில் பி.எல்.ஓ. என்னும் பாலஸ்தீன் விடுதலை இயக்கங்களின் கூட்டமைப்பு என்னும் குடையின்கீழ் வேலை செய்துகொண்டிருந்தன.

பி.எல்.ஓ.வுக்கு வெளியே இருந்து ஆதரவு கொடுத்த ஹமாஸ் போன்ற இயக்கங்களும் அங்கே

உண்டு. இவற்றில் தீவிர முஸ்லிம் இயக்கங்கள், சாது முஸ்லிம் இயக்கங்கள், மதச்சார்பற்ற இயக்கங்கள், இடதுசாரி இயக்கங்கள், எதையும் சாராத இயக்கங்கள் எனப் பலவகை இயக்கங்கள் அடக்கம். குறிப்பிட்ட தேசிய அடையாளம் ஏதுமில்லாத அல் காயிதா முதல் எங்கோ தொலை தூரத்தில் இந்தோனேஷியாவிலும் தாய்லாந்திலும் செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஜமா இஸ்லாமியா வரை, பாலஸ்தீன் மக்களுக்காகக் கவலைப்படவும் ஏதாவது செய்யவும் துடிக்கும் போராளி இயக்கங்கள் உலகம் முழுவதும் உண்டு.

எனில், பக்கத்து வரப்பில் வேலை செய்துகொண்டிருக்கும் ஹிஸ்புல்லா பற்றிச் சொல்லவே வேண்டாம் அல்லவா?

ஹிஸ்புல்லாவின் அடிப்படை நோக்கமும் பாலஸ்தீன் இயக்கங்களின் அடிப்படை நோக்கமும் ஒன்றுதான். இஸ்ரேல் ஒழிய வேண்டும். அரபு மண்ணில் கட்டக்கடைசி யூதன் ஒருவன் இருக்கும்வரை இந்த இயக்கங்களின் போர் நிற்கப்போவதில்லை.

ஹிஸ்புல்லா தொடங்கப்பட்ட தினம் முதலேயே இது இஸ்ரேலுக்குப் புரிந்துவிட்டது. பாலஸ்தீன் இயக்கங்களையாவது அவர்களால் பேச்சுவார்த்தைக்குக் கூப்பிட்டு உட்கார வைத்து ஏதோ கொஞ்சம் சமரசம் செய்துகொள்ள முடிந்திருக்கிறது. யாசிர் அராஃபத் கொஞ்சம் மிதவாதியாக இருந்த காரணத்தால் அநேகப் பேச்சுவார்த்தைகளைப் பல்வேறு காலகட்டங்களில் இஸ்ரேலுடன் நிகழ்த்தியிருக்கிறார்.

இன்றைக்கு பாலஸ்தீன் அத்தாரிடி என்கிற பெயரில் மேற்குக் கரையிலும் காஸா பகுதியிலும் பாலஸ்தீனியர்களின் ஆட்சி, பெயரளவுக்காவது சாத்தியமாகியிருப்பதற்குக் காரணம் அதுதான். அடிக்கடி பாலஸ்தீனியர்களின் பகுதியில் இஸ்ரேல் ஊடுருவுவதும், தாக்குதல் நிகழ்த்துவதும், பாலஸ்தீன் அமைச்சர்கள் உள்பட யாரை வேண்டுமானாலும் கைது செய்வதும் நடக்கத்தான் செய்கிறது என்றபோதும் சரித்திரத்தில் முதல்முறையாகப் பாலஸ்தீனியர்களுக்கென்று ஒரு தனி அடையாளம் இப்போதுதான் சாத்தியமாகியிருக்கிறது, அதுவும் அராஃபத்தின் முயற்சியினால்தான் என்பதை மறக்கக்கூடாது.

இதெல்லாமே நல்லது நடப்பதற்கான ஆரம்ப அறிகுறிகள் என்று நினைப்பவர்கள் உண்டு. போயும் போயும் இஸ்ரேலிடம் பிச்சை வாங்கியா பாலஸ்தீனியர்கள் பிழைக்க வேண்டும் என்று பேசுவோரும் உண்டு.

ஹிஸ்புல்லா இதில் இரண்டாவது கட்சிதான் என்றபோதும், இன்றுவரை பாலஸ்தீனியர்களுக்காகப் போரிடுவதில் தங்கள் வேகத்தை அவர்கள் குறைத்துக்கொண்டதே இல்லை. அரசியல் ஏற்பாடுகளெல்லாம் தலைவர்களால் செய்யப்படுபவை; மக்கள் என்ன செய்வார்கள் என்பதுதான் ஹிஸ்புல்லாவின் தலைவர் நஸ்ருல்லாவின் நிலைபாடு. (ஹிஸ்புல்லாவில் யாசிர் அராஃபத்தை அடியோடு பிடிக்காத தலைவர்கள் பலர் உண்டு! ஆனாலும் அவர் இருந்தவரை அவருக்குரிய மரியாதையை எள்ளளவும் குறைத்துக் கொடுத்ததில்லை.)

பாலஸ்தீன் போராளி இயக்கங்கள் அனைத்துமே ஹிஸ்புல்லாவுடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்டவை. தெற்கு லெபனானில் அவர்கள் தங்குவதற்கு இடம் கொடுத்து உதவிய காரணத்தினால் மட்டுமல்ல. இன்றுவரை இஸ்ரேலுக்கு எதிரான பாலஸ்தீன் இயக்கங்களின் அத்தனை நடவடிக்கைகளுக்கும் ஹிஸ்புல்லா கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு அளித்துவருகிறது.

ஹிஸ்புல்லாவின் இத்தகைய உதவிகளை ஏழு விதமாகப் பிரிக்கலாம்.